முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

**முன்னிலை: திருமதி எம்.சுமதி சாய் பிரியா, M.A., M.L., P.G.D.P.M., & I.R.,**

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

**2023-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**I.A.01/2022 in O.S.No.79/2021**

. . . . .

V.அப்துல் காதர் .. மனுதாரர்/வாதி

/ எதிர் /

P.சக்திவேல் .. எதிர்மனுதாரர்/பிரதிவாதி

அஜ்மீர்களஞ்சியம் .. வாதி தரப்பு சாட்சியம்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 15.02.2023-ம் தேதியன்று என் முன்னர் இறுதிவிசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சகுந்தலா தேவி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ராஜமோகன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று நீதிமன்றம் வழங்கும்

உ த் த ர வு-

மனுதாரரால் உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 7 விதி 14ன் கீழ் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை அசல் வழக்கில் வாதி தரப்பு கூடுதல் ஆவணங்களாக சேர்த்து வழக்கை மேல்நடத்த அனுமதிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

கடந்த, 15.03.2019ல் வாதிக்கும், பிரதிவாதிக்கும் ஏற்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தின் ஒரு தரப்பினர் என்றும், வாதி, பிரதிவாதியிடம் வழக்குச் சொத்தை கிரையம் பெறுவதற்காக கிரைய தொகை ரூ.10,10,000/- சேகரித்த பொழுது ரூ.3,00,000/- குறைவாக இருந்ததால் தன்னிடம் கடனாக ரூ.3,00,000/-

M SUMATHI SAI PRIYA
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Date: 2023.02.24 17:39:52 +0530

பெற்றுக்கொண்டார் என்றும், கடனாக வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுத்து விடுவதாகவும், அப்பணத்தை திருப்பி கொடுக்கும் வரை அதற்கு ஆதரவாக தன்னையும் ஒரு தரப்பினராக சேர்த்து கிரைய ஒப்பந்தம், பணம் கொடுத்த அன்றைய தினமே (15.03.2019) பதிவு செய்யப்பட்டது என்றும், மேலும் பிரதிவாதி தங்க நகை செய்யும் தொழில் செய்து வருவதால் தான், தன் திருமணத்திற்கு தன் மனைவிக்கு அணிவிக்க 12 பவுனில் நகைகள் செய்ய சொல்லி ரூ.3,00,000/-த்தை பிரதிவாதியிடம் 20.03.2019ல் கொடுத்ததாகவும், பிரதிவாதி ஒப்புக்கொண்டபடி தனக்கு தங்க நகை செய்து தராமல் ஏமாற்றி வந்ததால் தான் பிரதிவாதியிடம் நகை செய்ய கொடுத்த ரூ.3,00,000/- கேட்ட பொழுது பிரதிவாதி அந்த ரூபாயை குடும்ப செலவிற்காக செலவிட்டு விட்டதாகவும், சிறுக சிறுக அசலை கொடுத்து விடுவதாகவும் கூறி ரூ.50,000/- வரை மட்டுமே கொடுத்து விட்டு மீதி தொகை ரூ.2,50,000/-க்கு ஆதரவாக 21.05.2020 தேதியிட்ட வங்கி காசோலையை கொடுத்தார் என்றும், வங்கியில் போதிய பணமில்லாமல் குறிப்பாணை அனுப்பிவிட்டதாகவும், பிரதிவாதி நகை செய்து தருவதாக தன்னிடம் வாங்கிய ரூ.3,00,000/- வாதியின் வழக்கு சொத்துடன் சம்பந்தப்படுத்துவதில் எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும், வாதியிடமிருந்து தனக்கு சேர வேண்டிய ரூ.3,00,000/-ஐ தான் பெற்றுக்கொண்டு, வாதியும், தானும் ஏற்படுத்திக்கொண்ட சம்மத உறுதிமொழி பத்திரப்படி வழக்கு சொத்தை பொறுத்து தனக்கும், வாதி-பிரதிவாதிக்கும் எவ்வித தொடர்பும், உரிமையும் இல்லை என்றும், எனவே இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை அசல் வழக்கில் வாதி தரப்பு கூடுதல் ஆவணங்களாக சேர்த்து வழக்கை மேல்நடத்த அனுமதிக்க கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>**

M SUMATHI SAI PRIYA
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Date: 2023.02.24 17:40:05 +0530

மனுதாரர், எதிர்மனுதாரருக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வேண்டி அசல் வழக்கை தாக்கல் செய்து வாதியே அவர் தரப்பில் முதலாவது சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றும், இந்நிலையில் வாதி தரப்பு 2வது சாட்சியாக அஜ்மீர் களஞ்சியம் என்பவரை விசாரணை செய்ய வேண்டி நிரூபண வாக்கு மூலமும், அத்துடன் வாதி தரப்பு கூடுதல் ஆவணங்களாக ஆவண பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை கூடுதல் ஆவணங்க்ளாக ஏற்க வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை பிராது தாக்கல் செய்யும் போது ஏன் தாக்கல் செய்யவில்லை என்பது குறித்து எந்த விளக்கமோ, காரணமோ குறிப்பிடப்படவில்லை என்றும், மேலும் வாதி தரப்பு 2வது சாட்சியின் நிரூபண வாக்குமூலத்தையே இடைமனுவாக தாக்கல் செய்துள்ளனர் என்றும், அதில் ஆவணப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை கூடுதல் ஆவணங்களாக ஏற்க வேண்டி கூட பரிகாரம் கேட்கப்படவில்லை என்றும், ஆகவே எந்த ஒரு தகுந்த காரணமும் குறிப்பிடாத, குறைபாடான சங்கதிகளையுடைய, சட்டவரன் முறைகளுக்கு அப்பாற்பட்டு முறையாக தாக்கல் செய்யப்படாத வாதி தரப்பில் கூடுதல் ஆவணங்களை ஏற்க தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், வாதி தரப்பு கூடுதல் ஆவண பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 07.03.2019ம் தேதிய வங்கி ஸ்டேட்மெண்ட் நகல்கள் மற்றும் 06.06.2020ம் தேதி வங்கியில் போதிய பணம் இல்லாமல் திருப்பி அனுப்பிய ரிட்டன் மெமோ ஆகிய இரு ஆவணங்களும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(B)ன்படி தகுந்த அதிகாரிகளால் சான்றிதழ் அளிக்கப்படாலொளிய வாதி தரப்பு ஆவணங்களாக சட்டப்படி குறியீடுசெய்ய ஏற்கத்தக்கதல்ல என்றும், மேற்கண்ட இரு ஆவணங்களும் தகுந்த அதிகாரிகளால் சான்றளிக்கப்படவில்லை என்றும், மேற்படி

M SUMATHI SAI PRIYA
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Date: 2023.02.24 17:40:51 +0530

ஆவணங்களை 2ம் வாதி மூலம் வாதி தரப்பு கூடுதல் ஆவணங்களாக குறியீடு செய்ய எதிர்மனுதாரர் தரப்பில் கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்படுகிறது என்றும், இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65-(B)(4) பிரகாரம் மேற்படி ஆவணங்கள் சான்றளிக்கப்பட்டால் தான் அது ஆவணமாகவே ஏற்றுக்கொள்ள இயலும், இவ்வழக்கிலும் குறியீடு செய்யப்பட முடியும், தவறும்பட்சத்தில் அந்த ஆவணங்கள் குறியீடு செய்யப்படாமல் நிராகரிக்கப்பட வேண்டும் என்றும், எனவே மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவினை தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4)** இந்த மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா? இல்லையா? என்பதே ஆகும்.

**5)** இம்மனு குறிப்பிடும் அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி மூலம் கூடுதல் ஆவணங்களாக ஏற்றுக்கொள்ளக் கோரி மனுதாரரால் தாவா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா மனுவிற்கு எதிராக எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர் கூடுதல் ஆவணங்களாக சேர்க்கக் கோரிய ஆவணங்கள் ஏன் அசல் வழக்கு தாக்கல் செய்யும்போது தாக்கல் செய்யவில்லை என்பது குறித்து எந்த விளக்கமும், காரணமும் தாவா மனுவில் குறிப்பிடவில்லை என்றும், வாதி தரப்பு கூடுதல் ஆவண பட்டியலில் குறிப்பிட்டுள்ள 07.03.2019-ம் தேதிய வங்கி ஸ்டேட்மெண்ட் நகல்கள் மற்றும் 06.06.2020-ம் தேதிய வங்கியில் போதிய பணம் இல்லாமல் திருப்பி அனுப்பிய ரிட்டன் மெமோ ஆகிய இரு ஆவணங்களும் இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 65(பி)-ன்படி தகுந்த அதிகாரிகளால் சான்றிதழ் அளிக்கப்பட்டாமல் சட்டப்படி வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு

M SUMATHI SAI PRIYA
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Date: 2023.02.24 17:40:57 +0530

செய்ய ஏற்கத்தக்கது அல்ல என்றும், எனவே தாவா மனுவை தள்ளுபடி செய்யக் கோரி எதிர்மனுதாரரால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6)** தாவா அசல் வழக்கில், 24.03.2022-ம் தேதியன்று எழுவினாக்கள் வனையப்பட்டு, 28.10.2022-ம் தேதியன்று மனுதாரர்/வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அதன்பிறகு 09.11.2022-ம் தேதியன்று வாதி, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, அன்றையதினம் பி.வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டு, வாதி தரப்பு மேல் விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், மனுதாரர்/வாதி, தன் தரப்பில் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்யக் கோரி 21.12.2022-ம் தேதியன்று தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**7)** தாவா அசல் மனுவில் கூடுதல் ஆவணங்களாக சேர்க்கக் கோரிய ஆவணங்களை பரிசீலனை செய்கையில், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, சிங்கம்புணரி கிளையில் அஜ்மீர்களஞ்சியத்தின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கு பட்டியல் விவரம் என்பதும், மேற்படி அஜ்மீர்களஞ்சியத்திற்கு, இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதி 21.05.2020-ம் தேதியில் ரூ.2,50,000/-க்கு கொடுத்த 000158 என்ற எண்ணுள்ள கரூர் வைசியா வங்கியின் காசோலை என்பதும், மேற்படி காசோலையில் பணமில்லை என்று 06.06.2020-ம் தேதி வங்கியிலிருந்து திருப்பப்பட்டதற்கான ஆவணம் என்பதும், மேற்படி காசோலை போதிய பணமில்லை என்று வங்கியிலிருந்து திருப்பப்பட்தற்காக அஜ்மீர்களஞ்சியம், இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு வழக்கறிஞர் திரு.ஏ.பிரபாகர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்பதும், மேற்படி காசோலையில் பணமில்லை என்று கரூர் வைசியா வங்கியிலிருந்து எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு அனுப்பிய வங்கி அறிவிப்பு

M SUMATHI SAI PRIYA
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Date: 2023.02.24 17:41:05 +0530

என்பதும், மேற்படி அஜ்மீர்களஞ்சியத்தின் ஆதார் அடையாள அட்டையின் நகல் என்பதும் அறிந்து கொள்ள முடிகிறது. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் வாதி தரப்பு சாட்சியான அஜ்மீர்களஞ்சியம் பெயரில் உள்ளது என்றும், ஆனால் மேற்படி அஜ்மீர்களஞ்சியம் அசல் வழக்கில் வழக்குத் தரப்பினர் இல்லை. மாறாக வாதி தரப்பு சாட்சி மட்டுமே.

**8)** உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 7 விதி 14-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இது போன்ற மனு யார், எதற்காக எப்போது தாக்கல் செய்யலாம் என சொல்லப்பட்டிருப்பது பற்றி இந்நீதிமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. கட்டளை 7 விதி 14 உ.வி.மு.ச-ன் கீழ் எந்த ஆவணத்தை ஆதாரமாக கொண்டு வாதி வழக்கிடுகிறாரோ அந்த ஆவணத்தை அவருடைய உரிமை கோரிக்கைக்கு அனுசரணையான வகையில், ஆதாரமாக அவரது கைவசம் உள்ள அல்லது ஆளுகையில் உள்ள ஆவணம் எதன் பேரிலும் வழக்கிடும்போது, அதனை ஆவணப்பட்டியலில் குறிப்பிடவேண்டும் மற்றும் அவற்றை வழக்குரையோடு இணைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும். அதன் நகல்களையும் வழக்குரையுடன் இணைத்திருக்க வேண்டும். ஆவணம் ஏதும் வாதியின் கைவசத்திலோ, ஆளுகையிலோ இல்லாதபோது வேறு யாருடைய கைவசம் அல்லது ஆளுகையில் உள்ளது என முடிந்த அளவில் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாதிருக்கும்போது, வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் ஆவணங்களை வாதியின் தரப்பு சாட்சியமாக ஏற்கமுடியாது என்ற நிலையில் வாதி தரப்பில் கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளபோதும், வாதி இம்மனுவை தாக்கல் செய்யவில்லை, மாறாக வாதி தரப்பு சாட்சியாக முன்னிடப்பட்ட தாவா கிரைய ஒப்பந்தத்தில் வாதியுடன் சேர்ந்து தாவா சொத்தை கிரையம்

M SUMATHI SAI PRIYA
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Date: 2023.02.24 17:41:11 +0530

பெறுவதாக ஆவணத்தை ஏற்ப்படுத்திக்கொண்ட நபரான அஜ்மீர்களஞ்சியம் என்பவர் மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9)** மேலும், குறிப்பாக மனுதாரர் அஜ்மீர்களஞ்சியம் பிரதிவாதியிடம் தங்க நகை செய்ய ரூ.3,00,000/- கடனாக கொடுத்தாகவும் தாங்கள் பேசிக்கொண்டபடி பிரதிவாதி தனக்கு நகை செய்து கொடுக்கவில்லை என்றும், அதுபற்றி கேட்டபோது ரூ.50,000/-ம் பணத்தை கொடுத்து எஞ்சிய ரூ.2,50,000/-த்திற்கு வங்கி காசோலை கொடுத்ததாகவும், அதனை தான் வங்கியில் வசூலிக்க தாக்கல் செய்தபோது போதிய பணம் இல்லாததால் திருப்பப்பட்டுவிட்டது என்றும் அவருக்கு, பிரதிவாதி சக்திவேலுக்கும் இடையேயுள்ள வேறொரு தாவா குறித்த வழக்கு மூலம் பற்றி மனுவில் தெரிவித்திருப்பதோடு அதற்கு ஆதரவாகவே ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். குறிப்பாக இம்மனுவை ஆட்சேபித்து பிரதிவாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டிருப்பினும், வாதி இம்மனுவை தாக்கல் செய்யவில்லை. வாதி தரப்பு சாட்சியே தாக்கல் செய்துள்ளார் என்பதால் இம்மனு நிலைநிற்கதக்கதல்ல என கட்சி செய்யவில்லை. மாறாக, மின்னணுவியல் சாட்சியங்கள் என்ற முறையில் வங்கி கணக்கு குறித்த விவரங்கள் கனிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளதால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(ஆ)-ன் கீழான சான்று இல்லை என்றும் வாதி வழக்கு தாக்கல் செய்யும்போது வழக்குரையுடன் ஏன் இந்த ஆவணங்களை முன்னிடவில்லை என்று தகுந்த காரணங்கள் சொல்லப்படவில்லை என்றும், குறிப்பாக மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டபோது துவக்கத்தில் பரிகாரமே சரியாக கேட்கப்படவில்லை என்றும் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

**10)** இந்நிலையில், உ.வி.மு.ச கட்டளை 7 விதி 14-ன் கீழ் இம்மனு கோப்பிற்கே எடுக்கப்படாமல், எடுத்த எடுப்பிலேயே நிராகரிக்கப்பட்டிருக்க வேண்டிய

M SUMATHI SAI PRIYA
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Date: 2023.02.24 17:41:16 +0530

நிலையில் தவறுதலாக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளபோதும் வாதியோ, பிரதிவாதியோ அல்லது அதாவது வழக்கு தரப்பினர்கள் தவிர வேறு எவரும் தங்கள் வழக்கிற்கு ஆதரவாக பின்னிட்டு ஆவணங்களை தாக்கல் செய்யமுடியாது என்ற நிலையில், குறிப்பாக வழக்கு தரப்பினர்களும் கூட உரிய அனுமதிபெற்றே வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படும்போது அவற்றுடன் இணைத்து ஆவணங்களை தாக்கல் செய்ய இயலாமல் போனதற்கு உரிய காரணங்கள் கூறி, அதாவது அந்த ஆவணங்கள் யார் கைவசம் அல்லது ஆளுகையில் அப்போது இருந்தது என்பதை சொல்லியே அனுமதிபெற இயலும் என்ற நிலையில் வாதி தரப்பு சாட்சியான இம்மனுதாரர் அஜ்மீர்களஞ்சியம் தாக்கல் செய்துள்ள இம்மனு, மனு பொருண்மைகளின்படி அனுமதிக்கதக்கதல்ல என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

***முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.***

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, அதன்பின்பு என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2023-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M SUMATHI SAI PRIYA
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Date: 2023.02.24 17:41:23 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை.**

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>**

**<u>மற்றும் சான்றாவணங்கள்</u> :-** இல்லை

M SUMATHI SAI PRIYA
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Date: 2023.02.24 17:41:28 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
சிவகங்கை.
இடைநிலை மனு எண்.1/2022 இன்
அசல் வழக்கு எண்.79/2021
சீரான / வரைவு / உத்தரவு
<u>நாள்: 24.02.2023</u>